
J.B. Dykes, 1823-1876

Beatitudo
C.M.



பாமாலை 540 தயாபரா , என் உள்ளத்தில்

1 தயாபரா , என் உள்ளத்தில்
தெய்வன்பை ஊற்றுமேன் ;
அப்போது திவ்ய நேசத்தில்
வேரூன்றி நிலைப்பேன்.

2 வானாக்னி என்னில் மூட்டியே,
துராசை எரிப்பீர்;
எப்பாவ மேடும் குன்றுமே
உருக்கி விடுவீர்.

3 முன் பெந்தெகோஸ்தே நாளிலே
தீ போலத் தோன்றினீர்;
சுட்டெரிப்பின் நல்லாவியே,
என் பாவம் அழிப்பீர்.

4 என் ஐம்புலன்கள் யாவையும்
ஊடுருவிச் சென்றே
சுத்தாங்கம், ஜீவன், ஜோதியும்
உண்டாகச் செய்யுமே.

5 அப்போது இடறாமலும்
நற் பாதை செல்லுவேன்;
என் மீட்பர் பேரில் முற்றிலும்
எக்காலும் சாருவேன்.